**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோயமுத்தூர்</u>**

முன்னிலை : திரு.D.செந்தில்ராஜா, B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோயமுத்தூர்.

<u>2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் நாள் வெள்ளிகிழமை</u>
<u>(2052 திருவள்ளுவராண்டு ஸ்ரீசுபகிருது வருடம் கார்த்திகைத்திங்கள் 16-ம் நாள்)</u>

<u>ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.1782/2022</u>
CNR No.TNCB0A-033773-2022

அரசுக்காக : காவல் உதவி ஆய்வாளர்,
E-2, பீளமேடு காவல் நிலையம், கோயமுத்தூர்,
குற்ற எண்.722/2022 ...... குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

கருப்பையா (31/22) த/பெ. அழகர் ..... எதிரி

-------

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 30.08.2022-ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இன்று 02.12.2022-ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு குற்றவியல் வழக்குரைஞர் நிலை-2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும், அரசுத்தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்து இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 31.07.2022 ம் தேதி மாலை 17.00 மணிக்கு கோவை E-2 பீளமேடு காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, கோவை, பீளமேடு, விளாங்குறிச்சி ரோடு, தண்ணீர் பந்தல் ஸ்ரீ பண்ணாரியம்மன் டிரான்ஸ்போர்ட் எதிரில் உள்ள லாரி அசோசியேசன் பொறுப்பில் உள்ள காலி இடத்தின் மரத்தடியில் மேற்படி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் டிரைவராக பணிபுரியும் புகார்தாரர் பெரியசாமி சாட்சிகள் கருப்புசாமி,

ரங்கசாமி ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தபோது அதே டிரான்ஸ்போர்ட்டில் லோடிங்மேனாக வேலை செய்து வந்த எதிரி அங்கு வந்து புகார்தாரரைப்பார்த்து ஏண்டா நீ பெரிய ஆளா தாயோழி மகனே கேனப்புண்டையே என்று ஆபாச வார்த்தையால் திட்டியும், காலால் புகார்தாரரின் இடது தொடையில் எட்டி உதைத்தும், இடது காலை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டு புகார்தாரருக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தமையால் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323-ன் கீழ் E-2 பீளமேடு காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207-ன் படி வழங்கப்பட வேண்டிய அனைத்து ஆவணங்களின் நகல்களையும் இலவசமாக வழங்கி எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து எதிரியிடம் இ.த.ச.பிரிவுகள் 294(b), 323-ன் கீழான குற்றத்தின் சாராம்சம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. வழக்கு விசாரணையின்போது அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. <u>அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து வெளிவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> :- கடந்த 31.07.2022ம் தேதியன்று மாலை சுமார் 05.00 மணி அளவில் தண்ணீர் பந்தலில் உள்ள லாரி ஆபீசிற்கு எதிரி வந்து அ.சா.1யிடம் அவரது நண்பரான அஜ்மல் என்பவருக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இருந்தது சம்பந்தமாக அ.சா.1யிடம் தகராறு செய்து, அ.சா.1ஐப்பார்த்து ஆபாச வார்த்தைகளில் திட்டி அவரை கீழே தள்ளி இடது காலில் உதைத்துள்ளார். அதனால் அவருக்கு இடது கால் முட்டியில் காயம் ஏற்பட்டதை அடுத்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக கோவை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டபோது போலீசாரிடம் அ.தசா.ஆ.1 புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி சம்பவத்தை அ.சா.2 கேள்விப்பட்டுள்ளார்.

5. கடந்த 01.08.2022 ம் தேதி தலைமை காவலர் செந்தில்குமார் என்பவருக்கு கோவை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனை சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 ஐ விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலைய குற்ற எண்.722/2022 ல் இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323 ன் கீழ் அ.த.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின் அ.சா.3 வழக்கை அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை சுமார் 07.00 மணி அளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குருநாதன் மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப்பார்வையிட்டு அ.த.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அ.சா.1 சாட்சிகள் கருப்பையா, ரங்கசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததன் பேரில் நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்து, பின் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் லாவண்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.த.சா.ஆ.5 காயச்சான்றிதழ் பெற்று , பின்னர் வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து அத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச.பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும் பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். மேலும் எதிரித்தரப்பில் தரப்பில் சாட்சிகள் உண்டு என்று கூறியிருந்தாலும் எதிரி தரப்பில் எந்த ஒரு சாட்சிகளையும் விசாரிக்கவில்லை.

7. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323-ன் கீழான குற்றச்சாட்டுக்களானது அரசுத்தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

8. அ.சா.1 புகார் வாக்குமூலமான அ.த.சா.ஆ.1 ஐ தலைமை காவலரிடம் கொடுத்து அவருடைய சாட்சியத்தில் கடந்த 31.07.2022 ம் தேதியன்று மாலை 05.00 மணி அளவில் எதிரி குடிபோதையில் தண்ணீர் பந்தலில் உள்ள லாரி ஆபீசிற்கு வந்தார் என்றும், ஏற்கனவே அ.சா.1ன் நண்பர் அஜ்மல் என்பவருக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இருந்தது என்றும், அது சம்பந்தமாக அ.சா.1 யிடம் தகராறு செய்து, அ.சா.1 ஐப்பார்த்து ஆபாச வார்த்தைகாளில் திட்டி அவரை கீழே தள்ளி இடது காலில் உதைத்தார் என்றும், அதனால் அவருக்கு இடது கால் முட்டியில் காயம் ஏற்பட்டது என்றும், அதற்காக கோவை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், சிகிச்சையிலிருந்தபோது போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் நண்பரான அ.சா.2 சம்பவத்தன்று எதிரி அடித்ததில் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டது என்றும், அதனால் அவர் சிகிச்சைக்கு சென்றதாக சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. மேற்படி சாட்சியத்தை பரிசீலிக்கும்பொழுது அ.சா.1 கடந்த 31.07.2022 ம் தேதி நடைபெற்ற சம்பவத்தையும், புகாரிலுள்ள சங்கதிகளையும் உறுதியூட்டும் விதமாக சாட்சியம் அளித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. அ.சா.1ன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 அவருடைய சாட்சியத்தில் கடந்த 01.08.2022 ம் தேதி தலைமை காவலர் செந்தில்குமார் அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

10. மேலும் அ.சா.3 அவருடைய சாட்சியத்தில் 01.08.2022 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தைப்பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அவர்களிடமும் மற்ற சாட்சிகளிடமும் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின் எதிரியைக்கைது செய்து நிலைய பிணையத்தில் விடுவித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியத்தை எதிரித்தரப்பில் விரிவாக குறுக்கு விசாரணை செய்தபோதிலும் அரசுத்தரப்பு வழக்கை பாதிக்கக்கூடிய எந்த சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை.

11. அரசுத்தரப்பு சான்றாவணங்களை பரிசீலிக்கும்பொழுது சம்பவம் நடந்த உடன் அரசு மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து அ.சா.3 சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து எதிரியைக்கைது செய்துள்ளது அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.4 வரையுள்ள சான்றாவணங்களை பரிசீலிக்கும்போது தெரியவருகிறது. மேலும் சம்பவத்தில் எதிரி அ.சா.1 ஐ கீழே தள்ளியதால் காலில் காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை உறுதியூட்டும் விதமாக அவரது காலில் சாதாரண காயம் ஏற்பட்டதாக அ.த.சா.ஆ.5 ல் உள்ளது தெரியவருகிறது. மேற்படி அரசுத்தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

12. இறுதியாக, எதிரி இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323-ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டு, எதிரியின் வயது, அவருடைய எதிர்காலம், குடும்ப சூழ்நிலை, குற்றம் நடந்த சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரிக்கு அபராதம் மட்டும் விதித்து தீர்ப்பளிப்பது நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து இ.த.ச. பிரிவு 294(பி)-ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், இ.த.ச.பிரிவு 323-ன் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு ரூ.1,000/- அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகின்றது. (மொத்த அபராதம் ரூ.2000/-)

13. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைகள் திருத்தியபின் இன்று 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் நாள் திறந்த மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D SENTHILRAJA
Digitally signed by D SENTHILRAJA
Date: 2022.12.02 16:25:29 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

கோயமுத்தூர்.

அட்டவணை :

அரசுத்தரப்பு சாட்சிகள் :

அ.சா.1 - பெரியசாமி

அ.சா.2 - கருப்புசாமி

அ.சா.3 - ரஜினிகாந்த், காவல் உதவி ஆய்வாளர்

அரசுத்தரப்பு சான்றாவணங்கள்

அ.சா.ஆ.1 - புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ.2 - முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.3 - பார்வை மகஜர்

அ.சா.ஆ.4 - மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5 - காயச்சான்றிதழ்

அரசுத்தரப்பு சான்றுப்பொருள் : இல்லை

எதிரித்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்

எதிரித்தரப்பு சான்றுப்பொருட்கள் : இல்லை

D SENTHILRAJA Digitally signed by D SENTHILRAJA Date: 2022.12.02 16:25:37 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

கோயமுத்தூர்.

குறிப்பு :

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. எந்த சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் விசாரணை செய்யாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

As per Rule 106 of Criminal Rules of Practice

| S.I No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | E-2 Peelamedu P.S., Coimbatore. Cr.No.722/22 U/S.294(b), 323 IPC | Name | Karuppiah | Occurance | 31.07.2022 | |
| | | Father’s Name | Azhagar | Complaint | 17.08.2022 | |
| | | Occupation | Labourer | Apprehension | 02.08.2022 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Residence | Ravuthanpatti, Peraiyur TK, Madurai. Now at – LIG 1942, Gandhimanagar, Ganapathy, Coimbatore | Release on bail | 02.08.2022 |
| | | Age | 31/22 | Commitment | --- |
| | | | | Commencement of Trial | 16.11.2022 |
| | | | | Closure of Trial | 24.11.2022 |
| | | | | Sentence or Order | 02.12.2022 |
| | | | | Service of Copy of Judgement of Finding on Accussed | copy of Judgement served. |

D SENTHILRAJA
Digitally signed by D SENTHILRAJA
Date: 2022.12.02 16:25:44 +0530
Judicial Magistrate No.II, Coimbatore.

Judcial Form No.61 (See Rule 106)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, COIMBATORE.
JUDGEMENT IN CALENDER CASE NO.**1782 OF 2022** ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO.II, COIMBATORE.

| | |
|---|---|
| Complainant | The Sub Inspector of Police, E-2 Peelamedu P.S., Coimbatore. |
| Accused | Karuppiah S/o.Azhagar |
| Offence | U/s.294(b), 323 IPC |
| Findings | Conviction U/s.294(b), 323 IPC |
| Sentence | . ------ |

| S.I.No. | Description of the Accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father's Name | Caste or race | Occupation | Residence | Age |
| 1 | Karuppiah | Azhagar | Hindu | Labourer | Ravuthanpatti, Peraiyur TK, Madurai.<br>Now at – LIG 1942, Gandhimanagar, Ganapathy, Coimbatore | 31/22 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurance | Complaint | Apprehension or Appearance | Release on bail | Commencement of trail | Closure of trial | Sentence or Order | Explanation of Delay |
| 31.07.2022 | 17.08.2022 | 02.08.2022 | 02.08.2022 | 16.11.2022 | 24.11.2022 | 02.12.2022 | ---- |

D SENTHILRAJA
Digitally signed by D SENTHILRAJA
Date: 2022.12.02 16:25:51 +0530
Judicial Magistrate No.II, Coimbatore.